M.C.O.P.No. 18/2020

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

Date: 16.04.2026

ம.சா.1 – செல்வராஜ் த/பெ – சுப்பிரமணியன்

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1) நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். நான் விருதுநகரில் பர்னிச்சர் கடை வைத்துள்ளேன். நான் பல்சர் இருசக்கர வாகனம் ஓட்டி சென்ற போது விபத்து ஏற்பட்டது. என் மீது நான்கு சக்கர வாகனமான கார் மோதியது. எனது ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு முன்பு எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. தேவைப்பட்டால் எனது ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனக்கு ஏற்பட்ட வெளிக்காயங்கள் குணமாகி விட்டது என்றால் சரிதான். நான் விருதுநகரில் உள்ள திலக் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். மருத்துவ பில்கள் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவ பில்களுக்கு காப்பீடு மூலம் இழப்பீடு பெறவில்லை.

2) ம.சா.ஆ.4 காயச்சான்றில் குறிப்பிடப்பட்ட 12.06.2019ம் தேதிக்கு பின்னர் நான் மேற்கொண்டு சிகிச்சை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான், அறுவை சிகிச்சை செய்து பிளேட் பொருத்தப்பட்டது. ம.சா.ஆ.6 ஊனச்சான்று 22.12.2020ம் தேதி வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லை. மருத்துவக்குழுமம் முன்பு ஆஜராகி என்னை பரிசோதித்து ஊனச்சான்று வழங்கினர். ம.சா.ஆ.6 ஊனச்சான்றில் மருத்துவர் கையொப்பம் செய்யும் இடத்தில் ஒயிட்னர் போட்டு அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், மருத்துவர் சற்று மேலே

மேற்படி ஆவணத்தில் கையெழுத்து செய்துள்ளார்.

3) ம.சா.ஆ.6 ஊனச்சான்று பெற்று 6 வருடங்கள் ஆகிவிட்டது என்றால் சரிதான். தற்போது மீண்டும் பரிசோதனை செய்தால் எனக்கு உள்ள ஊனத்தின் சதவீதம் தெரியும் என்றால் சரிதான். அதற்கு நான் தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். எனது முதல் விசாரணையில் ரூ.5 லட்சம் செலவு ஏற்பட்டதாக சொல்வதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆவணங்கள் தொலைந்துவிட்டது. விபத்து பதிவேடு இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தைக் காட்டக்கூடிய மாதிரி வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4) விபத்து நடந்த இடம் இரு பேருந்துகள் செல்லக்கூடிய அகலமான சாலை என்றால் சரிதான். நான் வடக்கில்இருந்து தெற்கு நோக்கி சென்றேன். ஷோ—ரூமில் இருந்து வந்த கார் என் மீது மோதியது. எனது வழக்கிற்கு விரோதமாக உள்ளதால் மோட்டார் வாகன ஆய்வறிக்கை மற்றும் மாதிரி வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் முழுமையாக குணமாகி விட்டது என்றும், வருமான இழப்பு இல்லை என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை மிக அதிகமானது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6 ஆவணம் ஒயிட்னர் போட்டு அழித்துள்ளதால் அது ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனக்கு இழப்பீடு அதிகம் கிடைக்க வேண்டும் என காயத்தின் தன்மையை மிகைப்படுத்தி ஊனச்சான்று பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

5) ம.சா.ஆ.6 ஊனச்சான்றின் உண்மைத்தன்மை குறித்து அதனை வழங்கிய மருத்துவக்குழுமத்தை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். எனது கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் இல்லை என்றும், 2ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.